RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s207

# கந்தர்வன் கவிதைகளில் சமுதாய உறவுகளின் சிக்கல்கள்

ச.ம. மாசிலாமணி [அ, *], வா. சித்ரா [அ]

[அ] தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சூலூர், கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

# Problems of Social Relations in Gandharvan Poetry

S. M. Masilamani [a, *], V. Chitra [a]

[a] Department of Tamil, Rathnavel Subramaniam College of Arts & Science, Sulur, Coimbatore-641018, Tamil Nadu, India.

* Corresponding Author: chitra.v@rvsgroup.com

Received: 20-06-2022
Revised: 12-09-2022
Accepted: 03-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

History shows that new poetry emerged through revolutions all over the world. New poetry began to infiltrate society as a propaganda weapon in a way that was easily understood by lay people. In the Tamil environment, Bharatiyar started Pudukavitha as a platform for developing the spirit of liberation and reprimanding the existing inequalities in human relations. In the subsequent period, many thinkers and reformers appeared and contributed to awaken the Tamil people in the Tamil society, which had a practice of secrecy and endless ignorance. Magazines like 'Eluththu', 'Zhla' and poetry organizations like 'Vanampaadi' supported it and popularized the new poetry. The poets expressed the ideas of social awareness and social thinking, solutions to the problems of reformation as advices gently, and with prudence and revolutionary attitude that immediate change in the society is needed. The reason for this is the objective of revitalizing social relations and living together in an unequal manner. Based on this, the themes of literature, especially poetry, began to emerge in a new direction, in a new perspective, with concepts from new angles according to the times. In this background, social problems, social reform ideas and ideas about social change are taking place as the main ideas in the Tamil poems of this era and are causing various impacts. These are creative in a way that sheds light on the social factors that prevent human relationships from coming together.

**Keywords:** Gandharvan, Society, Social Problems, Social Relations

## முன்னுரை

மனிதர்கள் கூட்டு உழைப்பை மேற்கொண்டு சமூகமாக வாழத் தொடங்கியதிலிருந்து மனித நாகரிகம் உற்பத்தியாகத் தொடங்கியது. இந்த நாகரிக வளர்ச்சி பண்பாட்டை உருவாக்கியது. பின்னாளில் அப்பண்பாடே மனிதனை வழிநடத்திச் சென்றது. இப்பண்பாட்டு வழிநடத்தலில் அகம் என்கிற குடும்ப வாழ்க்கை, புறம் என்கிற சமுதாய வாழ்க்கை என்ற இரு வாழ்வியலையும் மனிதன் பண்பாட்டுக்கு உட்பட்டு வாழத் தொடங்கினான். இந்த அடிப்படையில் சமுதாய மாற்றங்களும் நிகழத்தொடங்கின. இந்த மாற்றத்தைக் காலந்தோறும் கவிஞர்கள், அறிஞர்கள் பதிவு செய்து வந்துள்ளனர். இவ்வாறாக, கந்தர்வன் சமுதாயத்தில் மனித உறவுகளுக்குள் ஏற்பட்டுள்ள விரிசல்களை மானுடத்தன்மையுடன் உற்றுநோக்கி தனது படைப்புகளில் பதிவாக்கம் செய்திருக்கின்ற சமுதாயப் பதிவுகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## சமுதாயமும் இலக்கியமும்

சமுதாயம் என்ற சொல்லிற்குப் பல்வேறு விளக்கங்கள் உள்ளன. "சமுதாயம் என்ற சொல் தோழமை (Socius) என்னும் பொருள் கொண்ட இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது" என்பர் (Jeyaprakasu, 2003). மக்கள் தங்களின் தேவைகளின் பொருட்டு சமூகமாகவும், குழுக்களாகவும் கூடி வாழ்கின்றனர்.

இலக்கியம் என்பது சமுதாயத்தின் இயக்கநிலையை எடுத்துக்கூறுவது என்பர். எந்தவகை இலக்கியமாக இருந்தாலும் அது தோன்றிய காலத்தைப் பிரதிபலிக்காமல் இருக்காது. அதுபோல தற்போதைய சூழலில் தோன்றும் இலக்கியங்களும் கடந்த காலத்தைப் பிரதிபலிக்காமல் இருக்காது. அதனால் ஒரு குறிப்பிட்ட கால மனித சமுதாய உறவு நிலைகளை அறிவதற்கு இலக்கியங்கள் வரலாற்று மூலங்களாகத் திகழ்கின்றன. அந்தவகையில் கந்தர்வன் கவிதைகளில் காணலாகும் கருத்துகளை, 1. வறுமை நிலை குறித்த பதிவுகள், 2. சாதியப் பிரச்சனைகள் குறித்த பதிவுகள் ஆகிய இரு பொருண்மைகளின் அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகிறது.

## வறுமை நிலை குறித்த பதிவுகள்

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமெனில் முதலில் அவனுடைய பொருளியல் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். பொருளியல் தேவைகள் நிறைவு செய்யப்படும் போதுதான் கல்வி, கலாச்சாரம் முதலியவற்றிலும் வளரமுடியும். அனைத்து மாந்தர்களும் வளரும் போதுதான் மனித உறவுகள் வளப்படமுடியும். ஆனால், இன்று பொருள்வளம் அனைவருக்கும் சீராக வந்து சேரவில்லை. பல ஆண்டு காலமாக மானுடத்தின் வளர்ச்சியைப் பாதித்து வரும் வறுமை, இன்னமும் சமுதாயத்தை விட்டு ஒழியவில்லை. ஒருபுறம், செல்வச் செழிப்பையும் மறுபுறம், வறுமையின் கோரக் காட்சிகளையுமே இன்றைய சமுதாயத்தில் காணமுடிகிறது. இத்தகைய முரண்பாடுகளுக்கு முடிவு காண்பது மனித உறவுகளை வலிமைப்படுத்தி சீரான சமுதாய உறவுகள் அமைய உறுதுணையாக அமையும்.

சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை வறுமையைப் பற்றி பல கவிஞர்கள் பாடியுள்ளனர். நெருப்பின் நடுவில் ஒருவன் தூங்கிவிடலாம் ஆனால், வறுமை ஒருவனைத் துளியும் தூங்கவிடாது என்பதை வள்ளுவர்,

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்

யாதொன்றும் கண்பாடு அரிது"

என்ற குறள்வழி உணர்த்துகிறார் (Parimelzhagar, 2012).

இந்திய நாட்டின் முதன்மை வாய்ந்த தொழிலாக இருப்பது விவசாயம். வேளாண்மைத் தொழிலின் முக்கியத்துவம் குறித்து பண்டைத்தமிழ் இலக்கியங்கள் உயரிய தொழிலாக போற்றியிருப்பதைக் காணமுடிகிறது. பொதுவுடைமையாக இருந்த உணவு, தனியுடைமையாக மாறியபோது அங்கு வறுமை என்பது உற்பத்தியாகிறது. "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்", என்பது அற இலக்கியங்கள் ஈகை குறித்து பேசுவதன்மூலம் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அறியமுடிகிறது. அன்றைய காலம் தொட்டு இன்று வரை உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் தரப்பட்டாலும் வறுமை என்பது நீங்காமல் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இக்கருத்தைக் கவிஞர் கந்தர்வன்,

"ஏழையென்றும் அடிமையென்றும்

எங்கும் உள்ள தேசத்தில்

நாம் எல்லோரும் சமம் என்பது

உறுதியாகாமல்

உழவுக்கும் தொழிலுக்கும்

நிந்தனை செய்தும்

வீணில் உண்டு களிந்திருப்போரை

வந்தனை செய்தும்

உழவுக்கு நீர்பாய்ச்சி

மாய்ந்து கொண்டிருக்கையில்

உங்களை

ஆடச் சொன்னது யார்

பள்ளுபாடச் சொன்னது யார்?" (கந்தர்வன், 1981)

என்று "பாரதி இங்கு இருந்தால்..." என்ற கவிதையில் விளக்கியுள்ளார் (Kandharvan, 1981[a]). வறுமை என்பது மனித சமூக உறவுகளை உணவு அடிப்படையில் பாகுபடுத்துகிறது. இதனால் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு அது சமூக உறவுகளைப் பாதிப்பிற்குள்ளாக்குகிறது என்பதை இக்கவிதை நுட்பமாக வெளிப்படுத்துகிறது.

உலகின் எல்லா நிகழ்வுகளுக்கும் காரணங்கள் உண்டு. திட்டவட்டமாகவும் காரணங்கள் இல்லாமல் எதுவுமே நிகழ்வதில்லை. இயற்கை வளங்கள் மிகுந்திருந்தும் நம்நாட்டில் வறுமை நிலவுகிறதென்றால், அதற்கு இன்றைய அரசியலமைப்பே காரணமாக அமைந்துள்ளது.

"உலக வரலாற்றைப் பார்வையிடும்போது உழைக்கும் மக்களின் வாழ்க்கை அவலம் மிகுந்ததாகவே இருந்துவந்துள்ளது என்பதை உணர முடிகிறது. அடிமைமுறை நிலவிய காலத்தில் அவர்கள் காலை முதல் இரவுவரை கடின உழைப்பில் ஈடுப்படுத்தப்பட்டனர். மனிதர்கள் என்றுகூட அவர்கள் மதிக்கப்படவில்லை பேசும் சுருவிகளாகவே கருதப்பட்டனர். சாட்டைகளால் அடிக்கப்பட்டும் சங்கிலிகளால் கட்டப்பட்டும் துயருற்றனர். உழைப்பின் சுமை பொறுக்கமுடியாமல் அவர்கள் சுருண்டு விழுந்த போது ஆளுவோர் புலிகளோடும், அதனை சிங்கங்களோடும் போரிடனைத்தும் வேடிக்கை பார்த்தனர்." இந்தகைய துயரநிலையைக் கடந்துதான் உழைப்பனின் வாழ்க்கை நகர்ந்து வந்திருக்கிறது (Sivasubramaniyan, 2017). இது ஆண்டான், அடிமை என்றவகையில் மனித உறவுகளைப் பிரித்து தனித்தனியானவர்களாக மாற்றியது.

மக்களாட்சி காலகட்டத்திலும்கூட இம்மக்கள் துன்பங்களிலிருந்து விடுபட முழுமையான வழி கிடைக்கவில்லை. உணவு, உடை, உறைவிடம் என்னும் அடிப்படைத் தேவைகள் கூட நிறைவு செய்யப்படவில்லை. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று புறநானூறு பாடல் அரசனுக்கு அறிவுத்துவதுபோல, கந்தர்வன், சுதந்திரத்திற்குப் பிறகான சூழலிலும் உண்டியின் அவசியம் குறித்தும் சமூக உறவுகளிலிருந்து விலக்கப்பட்ட மக்களின் வறுமை குறித்தும் "சிறகுகள் வாங்கி..." என்ற கவிதையில்,

"பாண்டவர் ஆண்டபோதும்

பசிதான்

பாபர் ஆண்டபோதும்

பசிதான்

பாண்டியன் ஆண்டபோதும்

பசி தான்

பாரதம் பிறந்தபோதும்

பசிதான்

சுதந்திரம் வந்தபோதும்

பசிதான்

சூத்திரன் ஆளும் போதும்

பசிதான்"

என்று மக்களின் வாழ்க்கையில் உண்டான வறுமை முடிவுக்கு வராத நிலையை விளக்கியுள்ளார். இது மக்களை வறுமையிலேயே நிலைபெறச் செய்து அவர்களது உழைப்பை மட்டும் பெற்றுவாழும் சூழலை விளக்குகிறது (Kandharvan, 1981c).

முதலாளி, தொழிலாளி என்ற சமூகப் பகுப்பில் தொழிலாளர்கள் உடல்உழைப்பு முழுவதையும் கொடுத்து உழைப்பிற்கேற்ற ஊதியமில்லாமல், வறுமைப் பிடியில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது சமுதாயத்தில் பணக்காரன், ஏழை என்று மனித உறவுகளைச் சிதைத்து, தொழிலாளி என்ற சமூக உறவையும், முதலாளி என்ற சமூக உறவையும் உற்பத்தி செய்து முரண் கொண்ட சமூக உறவுகளாகக் கட்டமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இந்த முரண் சமூகத்தில் தொழிலாளர்கள் பசிக்கொடுமைக்கு ஆளாவதையும் வாழவழியின்றி அல்லல்படுவதையும் பல கவிதைகளில் கந்தர்வன் சுட்டிக்கட்டியுள்ளார்.

“மழை நாட்களில்

ஈரத்துணிகளை உலர்த்த

வெப்பம் இல்லையென்று

வருந்துவோரே

எல்லா ஈரத்துணிகளையும்

கொண்டு வாருங்கள்

கொண்டு வந்து

எங்கள் வயிறுகளில்

படிய விடுங்கள்

உடனே உலரும்படி

உள்ளே

பசிநெருப்புத் தகிக்கிறது”

என்ற வரிகளில் பசியை நெருப்புடன் ஒப்பிட்டுப் பேசுகிறார் (Kandharvan, 1981b). ஏழைகளின் பசி பணக்காரர்களுக்கு குளிர்காயக்கூடிய நெருப்பாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஈகையை மறந்த செல்வந்தர்கள் ஈரத்துணிகளைக் காயவைக்கவாவது எங்கள் வயிறுகளைப் பயன்படுத்தி பசியை ஆற்றுங்கள் என்று கடிந்துரைப்பதைக் காணமுடிகிறது.

ஒரு நாட்டின் வறுமைக்குக் காரணம் கறுப்புப்பணம், கள்ளச்சந்தை, பதுக்கல், கடத்தல் முதலியவையாகும். இதனால் விலைவாசி உயர்வு ஏற்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்தாமல் வறுமையை ஒழிக்கமுடியாது என்பர் பொருளியலாளர். இத்தகைய தீமைகளைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். அரசு தம் கடமையைச் செவ்வனே செய்யாத காரணத்தால் மக்கள் வாங்கும் சக்தியை இழந்து வறுமைக்கு ஆளாக நேரிடுகிறது. இதில் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகிறவர்கள் ஏழை மக்கள்தான். இக்கருத்தினை ‘விடுகதை’ என்ற கவிதையில் கவிஞர் கந்தர்வன் அங்கதச்சுவையுடன் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி விளக்கியுள்ளார்.

“இந்த தேசத்திலேயே

மிகவும் உயர்ந்தவன்

கிராமவாசியா

நகரவாசியா

இல்லை

விலைவாசி”

இக்கவிதை, இங்கு உயர்வு, தாழ்வு என்பது வாங்கும் சக்தி, விற்கும் சக்தி என்ற வகையில் பிரிந்து நிற்பதைக் காட்டுகிறது. இது சமூக உறவுகளில் பெருத்த பாதிப்புகளை ஏற்படுத்துகிறது (Kandharvan, 1981[b]).

வறுமையில் வாடும் ஏழைகளின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அவ்வாறு அரசால் கொண்டுவரப்படும் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா? என்ற வினாவிற்கான விடையாக கந்தர்வனின் 'ரேஷன்" என்ற கவிதையில்,

“ரேஷன் கடையில்

அரிசி வாங்கிக்

கல்லையும் நெல்லையும்

பொறுக்க நினைத்து

அரிசியைப்

பொறுக்கி முடித்தோம்”

என்ற வரிகளில் அரிசியைக்காட்டிலும் கற்கள் அதிகமாக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. எத்தனை திட்டங்கள் கொண்டு வந்தாலும் அவற்றை முறையாகச் செயல்படுத்தும் அரசு அமையும் வரை நம்நாட்டில் வறுமையை ஒழிக்க முடியாது என்பதைக் கவிதையின்வழி உணரமுடிகிறது (Kandharvan, 1981[a]).

நம்நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே “ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்தசுதந்திரம் அடைந்துவிட்டோமென்று” என கூத்தாடியவர் பாரதியார். ஊழல்கள் மலிந்திருக்கும் இன்றைய சமுதாயத்தில் பாரதி வந்தால் அவரிடம் முறையிடுவதுபோல “இன்று பாரதி இங்கு வந்தால்” என்ற கவிதையைப் படைத்துள்ளார். அக்கவிதையில் பாரதி பாடிய காளிதேவியைச் சுட்டிக்காட்டி அதன்மீது கேள்வியெழுப்புகிறார்.

“எம் இந்திய மக்களுக்கு

சுதத்திரம் கிடைத்தும்

சுகம் கிடைக்காத

சூட்சுமம் என்ன

சொல்லுங்கள் என்றான்

சுப்பிரமணியபாரதி

எரிச்சலும் ஏக்கமுமாய்

ஏழைகள் சொன்னார்கள்

நீயுரைத்த காளிதேவி

எல்லைக்கப்பால் போய்

கடைக்கண் வைத்தாள்

எல்லைக்குள்ளே அவள்

கடுகளவும் பார்க்கவில்லை"

இவ்வாறு இந்திய நாட்டில் எண்ணற்ற கடவுள்கள், நித்தம் அவர்களுக்கு வழிபாடு. ஏழைகளின் உள்ளத்தில் கடவுள் குடியிருக்கிறார் என்று இச்சமுதாயம் அவர்களைப் புகழும் நிலையில் ஏழைகளின் வயிற்றை அந்தக் கடவுள்கள் கண்டுகொள்வதில்லை என்று சுட்டிக்காட்டி ஏழை மக்களின் வறுமைநிலையை எடுத்துரைக்கிறார் (Kandharvan, 1981c).

வறுமை நிலையை ஒழித்தால்தான் மனித உறவுகளை மேன்மைப்படுத்தமுடியும். இல்லையென்றால் சமுதாய உறவில் ஏற்பட்டுள்ள விரிசல் மேலும் வலுப்பட்டு முரண்கொண்ட சமூகமாகவே நிலைத்துவிடும் என்ற அடிப்படையில் கந்தர்வனின் கவிதைகள் வறுமையைப் பாடுபொருளாக்கி ஏழைகளின் வலிகளை உணர்த்தியுள்ளார் என்பதைக் காணமுடிகிறது.

## சாதியம்

சமுதாயத்தைப் பிரித்து பாழ்படுத்தும் காரணிகளுள் சாதிமுறை முக்கியமான ஒன்று. நம்நாட்டில் ஆழமாக வேரூன்றிய சாதிமுறையை ஒழிப்பதற்காக அம்பேத்கார், பெரியார் முதலானோர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டனர். தமிழகத்தைப் பொறுத்தவரை சாதிக்கு எதிரான குரல்கள் தொடர்ந்து ஒலித்து வருகின்றன. ஆயினும், ஒடுக்குமுறைகள் நம்நாட்டை விட்டு ஒழியவில்லை. சமுதாய உறவு ஒருமைப்பாட்டுக்குத் தடையாக இருக்கும் சாதிமுறைக்கு எதிராகப் புதுகவிஞர்களும் குரல் கொடுத்துவருவதைக் காணமுடிகிறது.

சாதிமுறையின் தோற்றும் குறித்து ஆய்வு செய்வது அதன் தீர்வுக்கு வழிவகுக்கும். "வரலாற்றின் தொடக்ககாலத்தில் மாந்தரிடையே சேர்ந்தவர்கள் சாதிப்பிரிவினைகள் ஏதுமில்லை ஓர் இனக்குழுவைச் ஓரிடத்தில்கூடி உணவுதேடும் பணிகளில் ஒன்றாக ஈடுபட்டு ஒற்றுமையாக வாழ்த்து வந்தனர். நிலவுடைமைச் சமுதாயம் தோன்றியபிறகு உழைப்புக் வளர்ச்சியால் உண்டான கருவிகளின் தொழில்பிரிவினைகளே காலப்போக்கில் சாதிகளாக வடிவம் கொண்டன. நிலவுடைமை சாதிகள் தோன்றுவதற்கு முன்னரே கருக்கொண்டிருந்தாலும் அவை பிறப்பெடுத்ததும் வலிமைபெற்றதும் நிலவுடைமையில்தான் நிலவுடைமை அமைப்பு தோன்றியபிறகுதான் சாதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்டுச் சாதிமுறை இறுக்கம் பெற்றது" (பா. கல்யாணி, 2014) என்ற அடிப்படையில் நோக்கும்போது இந்தியாவில் மனித உறவுகளைப் படிநிலைப்படுத்தி தனிமைப்படுத்தும் போக்கை சாதியம் கடைபிடித்துவருகிறது.

நிலவுடைமையைக் கட்டிக்காப்பதற்கு சாதிமுறை அன்று வசதியாக இருந்தது. செய்யும் தொழிலையே மகனும் செய்ததால் மன்னனும் மற்றுமுள்ள நிலவுடைமையாளர்களும் வேலைக்குப் புதிய ஆள் தேட வேண்டிய தேவை இல்லாமல் ஆனது. அதுமட்டுமின்றி தந்தையிடமிருந்து குறிப்பிட்ட தொழில்பற்றிய நுட்பங்களை மக்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பு இருந்ததால் உழைப்பவர்களுக்கென்று தனிப்பயிற்சி அளிக்கவேண்டிய தேவையும் எழவில்லை. உழைப்பவர்கள் சாதிக்கட்டுபாடுகளை மீறாமல் பார்ப்பதில் ஆளுவோர் கவனமாக இருந்தனர். இதனால், உழைப்பவர்கள் காலந்தோறும் அடிமைகளாக வாழும்நிலை ஏற்பட்டது. மேலும் அவர்களைத் தாழ்த்தப்பட்ட சாதியினராக ஒதுக்கிச் சமுதாய உறவுகளிலிருந்து விலக்கி பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

## கந்தர்வன் கவிதைகளில் சாதியச் சிந்தனைகள்

தொடக்ககாலத்தில் தொழில்களின் அடிப்படையில்தான் சாதி அமைந்திருந்தது. சமயஉணர்வு வளர்ந்து, சமய அமைப்புகள் நிறுவப்பட்டு. சமயநூல்கள் உருவான பின்னர் சாதிகடவுளால் படைக்கப்பட்டது என்னும் கோட்பாடு உருவானது, இந்தக் கருத்துக்குச் சமயசாத்திரங்கள் வலிமை சேர்த்தன.

"இறைவனின் முகத்திலிருந்து பிராமணர்களும், தோளிலிருந்து சத்திரியர்களும், தொடையிலிருந்து வைசியர்களும், பாதங்களிலிருந்து சூத்திரர்களும் தோன்றினர் என்று மனுதர்மம்

கூறுகிறது. பிராமணர்களுக்கு வேதம் ஓதுவதையும், சத்திரியர்களுக்கு செல்வம் நாடு காப்பதையும் வைசியர்களுக்கு வணிகம் செய்வதையும் சூத்திரர்களுக்கு ஏவல்புரிவதையும் இந்நூல் கடமையாகக் கூறுகிறது" (Seetharaman, 2014). இவ்வாறு தெய்வ வழிபாட்டிலும் சாதியம் தலைவிரித்தாடுவதை,

"பிரமாணப் பூசாரிக்கு

மாவிலை வேண்டும்

பண்டாரப் பூசாரிக்கு

வேப்பிலையே கிடைக்கும்

அரிஜனப் பூசாரிக்கு

அறுகம்புல்தான் கிடைக்கும்"

என்ற கவிதை, கடவுளுக்குப் பூசை செய்தால் மேன்மையாளர்களாக இருந்தாலும் சாதி அடிப்படையில் வேறுபடுகிறது (Kandharvan, 1981b). இந்த ஏற்றத்தாழ்வுகள் மனித உறவுகளுக்குள் நிகழ்த்தப்படும் வேற்றுமையைப் புலப்படுத்துகின்றன. மேலும் சாதியினால் மனிதர்களின் வாழ்க்கை சிறைப்படுத்தப்படுவதை,

"உனக்கென்று

ரத்தக் கலப்போடு ஒரு

கூட்டம் வேண்டாமா

என்று

ஜாதி கேட்டு

ஒரு சிறைக்குள் தள்ளியது"

என்ற வரிகள் விளக்குகின்றது.

"நம் நாட்டில் ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகுதான் சாதிகள் அரசுப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டன (Gnanakumaran, 2007). அவற்றின் விளைவாகச் சாதி உயர்வுகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிலைபெறத் தொடங்கின." இவ்வாறு ஆங்கிலேயர்கள் தனது நிர்வாக வசதிக்காக பதிவுசெய்யப்பட்ட சாதி இன்று நிர்வாகத்தையே சாதி அடிப்படையில் பிரித்துப் பார்க்கும் போக்கை,

"எங்கள் நாட்டில்

தொழிலாளி என்றால்

எல்லாம் சமமென்று

நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை

முதலியார் தொழிலாளி

அரிஜனத் தொழிலாளி

பிராமணத் தொழிலாளி

என்று

பேதம் பிரித்துத்தான் பார்ப்போம்"

என்ற கவிதையில் தெளிவாக்கியுள்ளார் (Kandharvan, 1981a).

இவ்வாறு சமூகம் சாதியத்தைக் கைக்கொண்டு மனித உறவுகளைப் பாகுபடுத்தி தாழ்த்தப்பட்ட மக்களை இழிவானவர்களாகச் சித்திரித்து அவர்களை ஊரிலிருந்து அந்நியப்பட்டவர்களாக மாற்றியிருக்கின்றனது. அதேபோல இங்கு முற்போக்கு அமைப்புகள் ஊடுருவினால் அதிலும்

சாதியத்தைப் புகுத்தி அதை திக்கற்று நிற்கச் செய்கிறது. இந்த அடிப்படையில் மனித உறவுகள் முரண் கொண்டதாக மாறி விலங்குகளைப்போல் செயல்படத் தொடங்கிவிடும் என்ற அபாயத்தையும் கந்தர்வன் கவிதைகளின் வழி அறியமுடிகிறது.

## முடிவுரை

மானுடத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும் காரணமாக வறுமை அமைந்துள்ளது. மக்களாட்சி வந்த பிறகும் கூட நாட்டின் வறுமையைப் போக்க முடியாத நிலையே நிலவி வருகிறது. அதற்குக் காரணம் ஆட்சியாளர்களே என்பதையும் விலைவாசியைக் கட்டுப்படுத்தி ஏழைகளின் வாழ்க்கையை மேம்படுத்தினால்தான் உலகில் சமூக உறவுகள் தழைக்கும் என்ற கருத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. சமுதாயத்தைப் பிரித்துப் பாழ்படுத்தும் காரணியாக சாதியம் அமைந்துள்ளது. சாதி பாகுபாட்டால் மக்களிடையே உண்டாகும் ஏற்றத்தாழ்வு மனித உறவுகளைப் பாதித்து அந்நியப்படுத்துகின்றன. எனவே மக்கள் அனைவரும் ஒன்றுகூடி நாட்டைச் செம்மைப்படுத்தினால்தான் சமுதாய உறவுகள் வலுப்பெற்று மானுட உறவுகள் சிறக்கும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## References

Gnanakumaran, (2007) Bharathi Katturaikalil Samuthaiya Sinthanaikal, Vijaya Pathippagam, Coimbatore, India.

Jeyaprakasu, (2003) Silapathigaram Kattum Samuthaiya Nilai, Vaanmalai Pathippagam, Chennai, India.

Kandharvan, (1981[a]) Kilisalkal, Agaram, Thanjavur, India.

Kandharvan, (1981[b]) Meesaikal, Agaram, Thanjavur, India.

Kandharvan, (1981[c]) Siraikal, Agaram, Thanjavur, India.

Parimelzhagar, (2012) Thirukurai urai, Saradha Pathippagam, Chennai, India.

Seetharaman, (2014) Manusasthiram, Alaikal Veeliyeedu, Chennai, India.

Sivasubramaniyan, A. (2017) Tamizhagathil adaimaimurai, Kalachuvadu Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License